[15th March 1961

THE HON. SRI M. A. MANICKAVELU : சிலயிடங்களிருந்து அப்படி வந்திருக்கிறது. எங்கு அத்தியாவசியமாக கொடுக்க வேண்டுமோ அங்கு கொடுக்கலாம் என்பது உத்தேசம். கலெக்டர்களிடமிருந்து ரிப்போர்ட்கள் வந்துகொண்டிருக்கின்றன. அவ்வப்போது நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

* 835 *Q.*—SRI V. K. KOTHANDARAMAN (on behalf of SRI T. S. RAMASWAMI) : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) the total amount of compensation paid to the hut dwellers who sustained loss during the floods of November in Madurai district;

(*b*) compensation per person; and

(*c*) the number of persons to whom compensation was paid?

THE HON. SRI M. A. MANICKAVELU : (*a*) & (*c*) The attention of that hon. Member is invited to the statement placed on the table of the House in reply to Question No. 834.

(*b*) The quantum of relief to the affected families is left to the discretion of the Collector subject to a maximum cash grant of Rs. 30 and a clothing grant of Rs. 10.

* 836 *Q.*—SRI V. K. KOTHANDARAMAN (on behalf of SRI T. S. RAMASWAMI) : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) the number of families rendered homeless in Chunampet area in the Chingleput district due to the recent rains; and

(*b*) the nature of relief given to them?

THE HON. SRI M. A. MANICKAVELU : (*a*) 2,705.

(*b*) A cash grant of Rs. 33,290 was sanctioned to the people affected by the floods. The affected people were also fed at Government cost.

* 837 *Q.*—SRI N. K. PALANISAMI : } SRI T. T. DANIEL : } Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) the nature of the damage caused by the recent rains in the Chingleput district;

(*b*) the total estimated loss;

(*c*) how many acres of land under cultivation were affected; and

(*d*) the nature of relief given to the ryots?

THE HON. SRI M. A. MANICKAVELU : (*a*) Yes, Sir.

(*b*) The time and labour involved in gathering the particulars will not be commensurate with the result.

15th March 1961]

(*c*) & (*d*) The hon. Member's attention is invited to the statement placed on the table of the House in reply to Question No.. 834.

SRI N. R. THIAGARAJAN : மதுரை ஜில்லாவில் சினிமா நடிகர்கள் ஓடோடியும் வந்து பணம் கொடுத்ததாக பத்திரிகை களில் செய்தி வந்தது. சிவாஜி கணேசன் 15,000 ரூபாய், எம்.ஜி.ஆர். 15,000 ரூபாய், இதேபோன்று பல சினிமா நடிகர்கள் பல ஆயிரக்கணக்கான ரூபாய் கொடுத்ததாக பத்திரிகைகளில் செய்தி வந்தது. ஆனல் மதுரை ஜில்லாவில் 17,000 ரூபாய்தான் வசூல் செய்ததாக கூறப்பட்டிருக்கிறது. ஆகவே, தாலுகா வாரியாக, யார் யார் எவ்வளவு கொடுத்தார்கள் என்று அவர்கள் பெயர்களேயும் சொல்ல முடியுமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU: அந்தத் தகவல் என் னிடம் இல்லே. அரசாங்கம் செலவு செய்தது, அங்கு வசூல் செய்தது தெரியும். இவை தவிர தனியார் கொடுத்ததுபற்றி தகவல் இல்லே.

SRI M. A. B. ARUMUGHASAMY : அப்பொழுது பெய்த மழை காரணமாக ஆத்தூர் அய்யம்பாளேயம் மருதநதி போக்கு மாறியதால் விளேநிலங்களுக்கு சேதம் ஏற்பட்டதுபற்றி ரெவின்யூ இலாகா அதிகாரிகளுக்கும், புட் ப்ரொடக்ஷன் என்ஜினியர் களுக்கும் தெரிவிக்கப்பட்டது, அதன் பேரில் என்ன நடவடிக்கை கள் எடுக்கப்பட்டன ?

THE HON. SRI M. A. MANICKAVELU: தனிக்கேள்வி போட வேண்டும்.

SRI T. T. DANIEL : It appears that about 14,000 huts in Chingleput district were damaged, but only a sum of about Rs. 2 lakhs has been sanctioned as relief. May I know whether the Government have any proposal to increase the amount as it works out at the rate of only Rs. 20 and even less per hut?

THE HON. SRI M. A. MANICKAVELU : As pointed out by me earlier, we are not implementing any insurance scheme when such damages occur. We are only lending a helping hand as far as possible to the most affected people. It is based at the rate of Rs. 30 each in respect of a fully-destroyed hut and Rs. 15 for a partly affected hut. The hon. Member cannot take the number of houses damaged and also the amount of relief sanctioned and then work out the amount given in respect of each hut as Rs. 20. He cannot come to any such conclusion.

SRI T. T. DANIEL : It is also found that 2,000 acres of crops were damaged in Chingleput district and it is said that the Government have supplied chemical fertilisers. May I know the quantity of chemical fertilisers and the nature of relief that were given to the agriculturists?

[15th March 1961

THE HON. SRI M. A. MANICKAVELU : I want notice, Sir.

SRI K. B. S. MANI : இந்த வெள்ள நிவாரண நிதிக்காக சர்க்கார் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒதுக்கப்பட்ட தொகை பூராவும் செலவழிக்கப்பட்டதா ? அல்லது எந்தெந்த மாவட்டங் களிலிருந்து அத்தொகையை செலவழிக்காமல் திருப்பியனுப்பி யிருக்கிறார்கள். அதற்கான காரணங்கள் என்ன என்று கூறப் பட்டிருக்கிறது ?

THE HON. SRI M. A. MANICKAVELU : இதற்காக பணம் ஒதுக்கப்படவில்லை. அங்கு ஏற்பட்டிருக்கிற நஷ்டத்தை முன் னிட்டு கலெக்டர் என்ன எழுதுகிறார்களோ அதையனுசரித்து இங்கிருந்து, "இப்படி செலவு செய்யலாம்" என்று உத்தரவிடப் படுகிறது, இங்கிருந்து உத்தரவில்லாமல் அங்குள்ள அதிகாரி முதலில் செலவு செய்துகொள்ளலாம். பின்னர், சாங்க்ஷனுக்கு வரலாம்.

SRI A. A. RASHEED : From the statement placed on the table of the House, we find that nothing has been mentioned about the financial assistance received from the Union Government. May I know whether any financial assistance has been received from the Prime Minister's Flood and Famine Relief Fund?

THE HON. SRI M. A. MANICKAVELU : We have not received any amount from the Government of India. But I think the Prime Minister has sent some amount to the Chief Minister of this State for relief of the affected people.

SRI P. G. MANICKAM : மேஜைமீது வைக்கப்பட்டிருக்கிற குறிப்பில் சேதமடைந்த ஹரிஜன குடிசைகளுக்கு 40 ரூபாய் உதவித் தொகை கொடுக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டி ருக்கிறது. 40 ரூபாயில் அவர்கள் வீடு கட்டமுடியாத நிலையில் இருப்பதால் அவர்களுக்கு அரசாங்கம் மூலம் வீடுகள் கட்டிக் கொடுப்பது பற்றி பரிசிலனை செய்யப்படுமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : அவர்களுக்கு வீடு கட்டிக் கொடுப்பதுபற்றி தனியாக திட்டமிருக்கிறது. வெள்ளத் தால் பாதிக்கப்பட்டவைகளுக்கு இந்த வகையில்தான் உதவி செய்யப்படும்.

Steel Trunk Workers (Co-operative Society)

* 838 *Q.*—SRIMATHI RAJATHI KUNCHITHAPATHAM : கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்வி களுக்குப் பதிலளிப்பாரா—

(அ) இம்மாநிலத்தில் டிரங்குபெட்டி செய்யும் தொழிலாளர் களுக்கு எத்தனை கூட்டுறவு சங்கங்கள் ரிஜிஸ்டர் செய்யப் பட்டுள்ளன ?

(இ) நெல்லையிலுள்ள பேட்டை டிரங்குபெட்டி செய்யும் தொழிலாளர்களுக்கு கூட்டுறவு சங்கம் ரிஜிஸ்டர் செய்வதற்கு ஏதாவது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா ?